6.1 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பழக்கடையில் 27 ஆப்பிள் பழங்களும் 19 ஆரஞ்சு பழங்களும் உள்ளன எனில், அக்கடையில் மொத்தம் எத்தனை பழங்கள் உள்ளன?

அ) 36 ஆ) 46

இ) 8 ஈ) 64

2. ஒரு செடியில் 24 சிவப்பு வண்ண ரோஜாக்களும் மற்றொரு செடியில் 17 வெள்ளை வண்ண ரோஜாக்களும் பூத்திருந்தன எனில், இரு செடிகளிலும் பூத்திருந்த ரோஜா பூக்கள் மொத்தம் எத்தனை?

அ) 14 ஆ) 51

இ) 31 ஈ) 41

6.2 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. குமுதா 35 அஞ்சல் வில்லைகளைச் சேகரித்தாள். அமுதா 28 அஞ்சல் வில்லைகளைச் சேகரித்தாள். இருவரும் சேகரித்த அஞ்சல் வில்லைகள் மொத்தம் எத்தனை?

அ) 53 ஆ) 63

இ) 62 ஈ) 64

2. ஒரு பெட்டியில் 34 முட்டைகளும் மற்றொரு பெட்டியில் 58 முட்டைகளும் உள்ளன எனில், இரண்டு பெட்டிகளிலும் உள்ள முட்டைகள் மொத்தம் எத்தனை?

அ) 71 ஆ) 82

இ) 92 ஈ) 24

LIVEWORKSHEETS